செய்தி வெளியீடு எண்:1039 நாள்:03.11.2021

<u>செய்தி வெளியீடு</u>

சுமார் 169 ஆண்டுகள் பழமையான சென்னை அரசு அருங்காட்சியகமானது, இயற்கை சார் வரலாறு மற்றும் பண்பாடுசார் வரலாறு ஆகிய இரு துறைகளையும் சார்ந்த பல்வேறு அரும்பொருட்களை கொண்டுள்ளது.

நாடு முழுவதும் நடைபெற்று வரும் 75–வது இந்திய சுதந்திர தின கொண்டாட்டங்கள் தொடர்பாக, சென்னை அரசு அருங்காட்சியகமானது இந்திய விடுதலைப் போராட்டம் என்ற சிறப்பு கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. சுதந்திர இயக்கத்தில் அவர்களை அர்ப்பணித்த போராளிகள் மற்றும் புரட்சியாளர்கள் தொடர்பான ஏராளமான கலைப்பொருட்கள், தபால்தலைகள், ஓவியங்கள், புகைப்படங்கள் போன்றவை இதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், வரலாற்றுக்கு முந்தைய ஆதிச்சநல்லூர் அரும்பொருட்களையும் கீழடி அகழாய்வு மாதிரிகளையும் காட்சிப்படுத்தும் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வுலகின் மிகத் தொன்மையான, சுமார் 3000 ஆண்டுகளுக்கும் மேல் பழமையான, இரண்டு நாகரிகங்களைச் சேர்ந்த வரலாற்றுக்கு முந்தைய தமிழர்களின் மகத்தான மற்றும் தன்நிகரற்ற செயல்திறனை இக்கண்காட்சி பிரதிபலிக்கும். மட்கலன்கள் செய்தல், உலோக வார்ப்பு, கல், மரம் மற்றும் உலோக வேலைபாடுகள், சாகுபடி, நெசவு, போன்றவற்றில் அம்மாந்தர் கொண்டிருந்த நிபுணத்துவமும் இக்கண்காட்சியின் வழியே வெளிக்கொணரப்படும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள கண்காட்சியினை மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறைகளின் அமைச்சர், 08.11.2021 அன்று காலை 9.30 மணியளவில் துவக்கிவைக்க இசைந்துள்ளார்கள்.

இயக்குனர்,
அருங்காட்சியகங்கள் துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9